ஸ்ரீ:
ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ தேசிகன் திருக்குமாரர் ஸ்ரீ நயினாசாரியார் அருளிச்செய்த

பிள்ளையந்தாதி

தனியன்

சீரார்தூப்புல் பிள்ளை அந்தாதி என்று செழுந்தமிழால்
நேராக வேதாந்த தேசிகர் தாளிணைக் கீழ்மொழிந்தான்
ஏரார் மறைப்பொருள் எல்லாம் எடுத்திவ் உலகு உயவே
சீராகிய வரதாரியன் பாதந் துணை நமக்கே.

1: இரண்டு முறை சேவிக்கவும்

மாமலர் மன்னிய மங்கை/ மகிழ்ந்துறை மார்பினந்தாள் /
தூமலர் சூடிய தொல்லருள் * மாறன் துணையடிக்கீழ் –
வாழ்வை யுகக்கும் / இராமானுசமுனி வண்மைபோற்றும் –
சீர்மையன் / எங்கள் தூப்புல் பிள்ளைபாதமென் சென்னியதே. (2)

2:
சென்னி வணங்கச்/ சிறுபனி சோர வெங்கண்ணிணைகள் /
வெந் நரகங்களும் வீய வியன்கதி இன்பமேவத் *
துன்னு புகழுடைத் தூப்புல் துரந்தரன் தூமலர்த் தாள் –
மன்னிய / நாள்களும் ஆகுங்கொல் / மாநிலத்தீர் நமக்கே.

3:
மாநிலத் தோதிய / மாமறை மன்னிய நற்கலைகள் /
ஆனவை செப்பும் அரும்பொருள் அத்தனையே அருளும் *
தூநெறி காட்டும் இராமானுசமுனித் தோத்திரஞ்செய் /
ஊனமில் தூப்புலையன் / ஓர் புகழின்றி உய்வில்லையே.

4:
உய்யும் வகையில்லை / உத்தர வேதியுள் வந்துதித்த /
செய்யவன் மேவிய சீர் அருளாளரைச் * சிந்தைசெயும்
மெய்யவன் எந்தை / இராமானுசனருள் மேவிவாழும்
ஐயன் / இலங்கு தூப்புல் பிள்ளை ஆய்ந்த பொருளன்றியே.

5:
அன்றிவ் வுலகினை யாக்கி / அரும்பொருள் நூல்விரித்து /
நின்றுதன் நீள்புகழ் வேங்கட மாமலை மேவி * பின்
வென்றிப் புகழ்த் திருவேங்கட நாதனெனும் குருவாய் /
நின்று நிகழ்ந்து / மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே.

6:
வித்தகன் வேதியன் / வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல் /
மெய்த்தவன் உத்தமன் வேங்கட நாதன் வியன் கலைகள் *
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமறக் /
கைத்தவன் என்றுரைத்தேன் / கண்டிலேன் என் கடுவினையே.

7:
வினைகாள் உமக்கு / இனி வேறோர் இடந்தேட வேண்டும் /
எனிச் சினமேவி முன்போற் சிதைக்கும் வகையிங்கு அரிது கண்டீர் *
என் எனில் இராமானுசமுனி இன்னுரை சேரும் / தூப்புல்
புனிதர் / என்புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே.

8:
பொருந்திப் புவிதனிற் / பொய்வாழ்க்கை பூண்கின்ற பூரியர்காள் /
இருந்து நரகினிடர் கெடு மாற்றை அறிகின்றிலீர் *
பொருந்தும் பொருளொன்று கேளீர் / பொங்கும்மிவ் இடர்க்கடற்கு –
வருந்தாது / தூப்புல் மா புருடன் பாதம் வணங்குமினே.

9:
வணக்கம் ஒடுக்கம் / வழக்கம் ஒழுக்கம் இரக்கம் சேரும் /
இணக்கம் உறக்கம் இழுக்கும் அழுக்கும் மிகந்து நிற்குங் *
குணக் குலமோங்கும் இராமானுசன் குணங் கூறும் / தூப்புல்
அணுக்கனைப் பிள்ளை தனை / அரணாக அடைபவர்க்கே.

10:
அடைபவர் தீவினை மாற்றி / அருள் தருந் தூப்புலைய /
இடர்தரும் இப்பிறவிக்கடல் தன்னில் அமிழ்ந்தவென்னைக் *
கடையறப் பாசங் கழற்றி நின் தாளிணைக் காணும் வண்ணம் /
உடையவனே அருளாய் / உணர்ந்தார் தங்கள் கற்பகமே.

11:
கற்பகமே என்று / காசினியோரைக் கதிக்கமாட்டேன் /
வெற்பிடையே நின்று வெந்தவத் தீயிலும் வேவமாட்டேன் *
பற்பல கலைவல்ல பாவலனே பத்தரேத்தும் தூப்புல் /
அற்புதனே அருளாய் / அடியேனுக் கரும்பொருளே.

12:
பொருளான தொன்றும் / என்னில் பொருந்தாதது மன்றி அந்தோ /
மருளே மிகுத்து மறையவர் நல்வழி மாற்றி நின்றேன் *
தெருளார் மறைமுடித் தேசிகனே / எங்கள் தூப்புல் தேவே –
அருளாய் / இனியெனக்கு உன்னருளே அன்றி ஆறில்லையே.

13:
ஆறாக வெண்ணும் / அருங்கருமம் ஞானங் காதல்கொண்டு /
வேறாக நிற்கும் விரகெனக் கில்லை விரத்தியில்லை *
தேறாது திண்மதி சீரார் கதியிலுஞ் செம்பொன்மேனி /
மாறாத தூப்புல் மாலே / மறவேன் இனி நின்பதமே.

14:
நின்பதந் தன்னிலும் / நேரே எனக்கில்லை அன்புகண்டாய் /
நின் பதம் ஒன்றிய அன்பரிலும் நேசமில்லை அந்தோ *
என்படி கண்டு இனியென் பயன் ஏதமில் தூப்புலெந்தாய் /
உன்படியே அருளாய் / உதவாயெனக்கு உன்னருளே.

15:
உன்னருளன்றி / எனக்கொரு நற்றுணை இன்மையினால் /
என்னிருவல் வினை நீயே விலக்கி யிதங்கருதி *
மன்னிய நல் திருமந்திரம் ஓதும் பொருள் நிலையே /
பொன்னருளால் அருளாய் / புகழ் தூப்புல் குலவிளக்கே.

16:
விளக்காகி / வேங்கட வெற்பினில் வாழும் விரைமலராள் /
வளக்காதல் கொண்டுறை மார்பன் திறத்தும் உனதடியார் *
துளக்காதல் இல்லவர் தங்கள் திறத்திலுந் தூய்மையெண்ணிக் /
களக்காதல் செய்யு நிலைகடியாய் / தூப்புல் காவலனே.

17: இரண்டு முறை சேவிக்கவும்

காவலர் எங்கள் / கிடாம்பிக் குலபதி அப்புளார்தம் /
தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து * அவர் தம்மருளால்
நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற / நம்பிக்
காவலர் தூப்புல் குலத்தரசே / எம்மைக் காத்தருளே. (2)

18:
அருள்தரும் ஆரண தேசிகனே / எங்கள் தூப்புல் தேவே /
வரு கவி தார்க்கிக சிங்கமே / வாதியர் வாழ்வறுத்தாய் *
இருகையும் கூப்பி உரைக்குமிவ் விண்ணப்பம் ஒன்றுகேளாய் /
உருவ எனக்கருளாய் / எண்ணுமுள்ளமுன் தொண்டரையே.

19: இரண்டு முறை சேவிக்கவும்

தொண்டருகக்குந் துணையடி வாழி / நின் தூமுறுவல் –
கொண்ட முகம்வாழி / வாழி வியாக்கியா முத்திரைக்கை *
வண்திரு நாமமும் வாழி / மணிவட முப்புரிநூல் –
கொண்டசீர்த் தூப்புல் குலமணியே / வாழி நின்வடிவே. (2)

20: இரண்டு முறை சேவிக்கவும்

வடிவழ கார்ந்த / வண் தூப்புல் வள்ளல் மென் மலரடிமேல் /
அடியவர் ஓத அந்தாதி இருபதும் ஆய்ந்துரைத்தேன் *
திடமுடன் ஈதைத் தினந்தொறும் ஆதரித்து ஓதுமன்பர் /
முடியிடை நேர்படும் / தூப்புலம்மான் பத மாமலரே. (2)

சீரார்த்தூபுல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: